ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1640/23 - 2010 පෙබරවාරි 10 වැනි බදාදා - 2010.02.10

*1640/23 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மத்திய மாகாண மாகாண சபை

*1989 ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க (இடைநேர் விளைவான விதிகள்) சட்டத்தின் 2ஆம் பிரிவினதும் 252ஆம் அத்தியாய மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 277 (1அ) ஆம் பிரிவின் கீழும் மத்திய மாகாண சபையின் 1990ஆம் ஆண்டின் 7 இலக்கத்தைக் கொண்ட உள்ளூராட்சி தாபனங்களின் நிர்வாகம் மேற்பார்வை செய்தல் அதிகாரப் பகிர்வு சட்டத்தின் 2(3) (அ) (i) ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளும் கட்டளை*

1989 ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க (இடைநேர் விளைவான விதிகள்) சட்டத்தின் 2ஆம் பிரிவினதும் 252ஆம் அத்தியாய மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 277(1அ) ஆம் பிரிவின் கீழும் மத்திய மாகாண சபையின் 1990 ஆம் ஆண்டின் 7 இலக்கத்தைக் கொண்ட உள்ளூராட்சி தாபனங்களின் நிர்வாகம் மேற்பார்வை செய்தல் அதிகாரப் பகிர்வு சட்டத்தின் 2(3) (அ) (i) ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மூலம் மத்திய மாகாணத்தின் முதல் அமைச்சரும் உள்ளூராட்சி விவகார அமைச்சருமான சரத் ஏக்கநாயக்க ஆகிய நான், மத்திய மாகாணத்தின் கண்டி மாநகர சபையின் நகர பிதா திரு. எல். பீ. அலுவிகார அவர்களை உடனடியாக செயல்படும்படியாக அவர்களது பதவிவகித்தலை தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கின்றேன்.

மத்திய மாகாண சபையின் 1989ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க (இடைநேர் விளைவான விதிகள்) சட்டத்தின் 2ஆம் பிரிவினதும் மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 277(1ஆ) (அ) (i)ஆம் பிரிவின் கீழும் மத்திய மாகாண சபையின் 1990 ஆம் ஆண்டின் 7 இலக்கத்தைக் கொண்ட உள்ளூராட்சி தாபனங்களின் நிர்வாகம் மேற்பார்வை செய்தல் அதிகாரப் பகிர்வு சட்டத்தின் 2(3) (அ) (i) பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய உடனடியாக செயல்படும்படியாக மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தின் கண்டி மாநகர சபை நகர பிதாவின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் நகர பிதாவின் நிர்வாகத்தையும் நிறைவேற்றுவதற்காக அந் நகர சபை பிரதி நகர பிதா திரு. கே. எல். சுமிந்த விக்ரமசிங்க அவர்களை நியமிக்கின்றேன்.

சரத் ஏக்கநாயக்க,
முதல் அமைச்சரும் உள்ளூராட்சி விவகார அமைச்சரும்,
மத்திய மாகாண மாகாண சபை.

முதல் அமைச்சர் அலுவலகம்,
கண்டி,
2010 பெப்புருவரி 08.

02-601/1

## மத்திய மாகாண மாகாண சபை

மத்திய மாகாண சபையின் 1989ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க (இடைநேர் விளைவான விதிகள்) சட்டத்தின் 2ஆம் பிரிவினதும் 252 ஆம் அத்தியாய மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 277(1அ) ஆம் பிரிவின் கீழும் மத்திய மாகாண சபையின் 1990 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கத்தைக் கொண்ட உள்ளூராட்சி தாபனங்களின் நிர்வாகம் மேற்பார்வை செய்தல் அதிகாரப் பகிர்வு சட்டத்தின் 2(2) ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மூலம் மத்திய மாகாணத்தின் முதல் அமைச்சரும் உள்ளூராட்சி விவகார அமைச்சருமான சரத் ஏக்கநாயக்க ஆகிய நான், மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தின் கண்டி மாநகர சபையின் நகர பிதா திரு. எல். பீ. அலுவிகார அவர்களினால் மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 277(1) ஆம் பிரிவின் கீழும் மத்திய மாகாண உள்ளூராட்சி தாபனங்களின் நிர்வாகம் நடந்துள்ளதாவென பரிசீலிக்கும் பிரகடனத்தின் 2(1) ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ளதன் பிரகாரம் ஏதேனும் பிழைகள் நடந்துள்ளனவா என பரிசீலிப்பதற்கு இவ் அறிவித்தல் திகதியிலிருந்து 3 மாத காலத்துக்குள் எனக்கு அதன் வாக்குமூலத்தை கொடுப்பதற்கு திரு. என். மஹேந்திர ராஜா அவர்களை நியமிக்கின்றேன்.

இவ் அதிகாரிக்கு அவற்றை பரிசீலனை செய்வதற்கு உரித்தான பரிசீலனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் அமைக்கப்படுகின்ற பரிசீலனை ஆணைக்குழுவின் அதிகாரங்கள் இருக்க வேண்டும்.

சரத் ஏக்கநாயக்க,
முதல் அமைச்சரும் உள்ளூராட்சி விவகார அமைச்சரும்,
மத்திய மாகாண மாகாண சபை.

முதல் அமைச்சர் அலுவலகம்,
கண்டி,
2010 பெப்புருவரி 08.

02-601/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.